MAY 2025 **U/ID 30620/ULA4A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. 'இரத்தத் துளிகள் பயிராகின்றன' என்ற கதையின் ஆசிரியர் யார்?

2. கு. அழகிரிசாமி எச்சிறுகதைக்குச் சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது?

3. தமிழ்ச்சொல் தருக:- கோஷ்டி, ஜாஸ்தி, ஜில்லா.

4. திணைமயக்கம் என்றால் என்ன? சான்று தருக.

5. மனோன்மணியம் எந்த வகை நாடகத்தைச் சார்ந்தது?

6. சீவக அரசனுக்குக் குலக்குருவானவர் யார்?

7. அகர வரிசைப்படுத்துக:- தாகம், தாய், தகப்பன், தந்திரம், தொன்மை.

8. ஒருபொருள் குறித்த பலபெயர்த் திரிசொல் என்றால் என்ன? சான்று தருக.

9. பொருள் வேறுபாடு அறிக:- கலி, களி, கழி.

10. எட்டுத்தொகையில் புறநூல்கள் எவையெவை?

11. மணிக்கொடிக்காலம் என்றால் என்ன?

12. குறிப்பு வரைக - பண்பு விளக்கப் புதினம்.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. சனிக்கிழமை சிறுகதை உணர்த்தும் செய்தியைப் புலப்படுத்துக.

14. தர்ம ராஜ்யம் என்ற கதையின் வழியாக அறியலாகுவனவற்றை விளக்குக.

15. மனோன்மணியின் அழகினைக் காட்சிப்படுத்துக.

16. அகத்தியரின் சிறப்புகளாக நீவிர் அறிவனவற்றை எழுதுக.

17. சிலப்பதிகாரத்தின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

18. சங்க காலம் பொற்காலமா? இக்கூற்றினை விவாதிக்க.

19. பின்வரும் தொடரினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.

தமிழானது தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் பலரின் தாய்மொழி ஆகும். தமிழ், உலகில் உள்ள முதன்மையான மொழிகளில் ஒன்றும் செம்மொழியும் ஆகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிக அளவிலும், ஐக்கிய அரபு அமீரகம், தென்னாப்பிரிக்கா, மொரிசியசு, பிசி,

இரீயூனியன், திரினிடாடு போன்ற நாடுகளில் சிறிய அளவிலும் தமிழ் பேசப்படுகிறது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ் மொழி, தற்போது வழக்கில் இருக்கும் ஒரு சில செம்மொழிகளில் இதுவும் ஒன்றாகும்.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. காகித உறவு என்ற சிறுகதையின் கதைக்கருவினை விளக்குக.

21. குடிலனின் தனிமொழியை விவரிக்க.

22. வல்லினம் மிகா இடங்களைச் சான்றுகளுடன் விளக்குக.

23. பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்களை அறிமுகம் செய்க.

24. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

———————